# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2016.12.16

**ஆணைக் குழுச் சுற்றறிக்கை இலக்கம் : 19/2016**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**விரிவுரையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான ஓய்வு விடுமுறை (sabbatical leave) தொடர்பானது**

விரிவுரையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான ஓய்வு விடுமுறை (sabbatical leave) சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள 1989.10.25 ஆம் திகதிய 408 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையின் 5 (ஆ) உறுப்புரை மற்றும் 2010.11.15 ஆம் திகதிய 938 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

**2.** 2016 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரங்கள்(திருத்தப்பட்டவாறான) சட்டத்தின் ஏற்பாடுகளை கவனத்திற் கொண்டு 938 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைப்பதற்கு 2016.11.17 ஆம் திகதி கூடிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் 953 ஆவது கூட்டத்தொடரின்போது தீர்மானிக்கப்பட்டது ;

" விரிவுரையாளர்கள் தமது 64 ஆவது பிறந்த திகதிக்கு முன்னர் ஓய்வு விடுமுறையை (sabbatical leave) நிறைவு செய்தல் வேண்டும்.

உத்தியோகத்தர்கள் தொடர்பாக கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகள் ஏற்புடையதாக இருக்கும்;

(i) உத்தியோகத்தர் ஒருவர் 55 வயது பூர்த்தியடைவதன் அடிப்படையில் சேவையிலிருந்து ஓய்வு பெறக் கருதினால் அவரது 54 ஆவது பிறந்த திகதிக்கு முன்னர் ஓய்வு விடுமுறையை (sabbatical leave) நிறைவு செய்தல் வேண்டும்.

(ii) உத்தியோகத்தர் ஒருவர் 60 வயது பூர்த்தியடைவதன் அடிப்படையில் சேவையிலிருந்து ஓய்வு பெறக் கருதினால் அவரது 59 ஆவது பிறந்த திகதிக்கு முன்னர் ஓய்வு விடுமுறையை (sabbatical leave) நிறைவு செய்ததன் பின்னர் மீண்டும் சேவைக்கு சமுகமளித்தல் வேண்டும்.

(iii) உத்தியோகத்தர் ஒருவர் 56 - 59 வயதுகளுக்கிடையில் சேவையிலிருந்து ஓய்வு பெறக் கருதினால் அவர் ஓய்வு பெறும் திகதிக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் வரும் பிறந்த திகதிக்கு முன்னர் ஓய்வு விடுமுறையை (sabbatical leave) நிறைவு செய்ததன் பின்னர் மீண்டும் சேவைக்கு சமுகமளித்தல் வேண்டும். "

3. 408 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மற்றும் இது தொடர்பாக பின்னர் வெளியிடப்பட்ட திருத்தங்கள் எவ்வித மாற்றங்களுமின்றி தொடர்ந்தும் அமுலில் இருக்கும்.

4. 2010.11.15 ஆம் திகதிய 938 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கை இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

5. தயவு செய்து இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா

தலைவர்

பிரதிகள்:-

1. செயலாளர், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள்,
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
8. கணக்காளர், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்.
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் /சிரேஷ்ட உதவிநிதிப் பொறுப்பாளர்கள்/ உதவிநிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/6/4/3